**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**O.S. No. 26 / 2024**

**வா.சா.2 – பொன்னழகு 07.10.2025**

**குறுக்கு விசாரணை :–**

பிராதில் பூர்வீக சொத்தை விற்பனை செய்து தாவா சொத்தை கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த பூர்வீக சொத்து எது என்றால் கீழடி அம்மன் கோவிலுக்கு பின்புறம் உள்ள வீடும் காலியிடமும் ஆகும் அதன் சர்வே எண் எனக்கு தெரியாது. அந்த சொத்தின் நான்குமால் எனக்கு சொல்ல தெரியாது. அந்த பூர்வீக சொத்து யாருக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றால் எனது அம்மாவின் உறவினர் தங்கம் என்பவருக்கு கிரையம் கொடுத்தார்கள். அந்த தங்கம் என்பவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அந்த பூர்வீக சொத்தை எந்த வருடம் கிரையம் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் நான் சிறுவயதாக இருந்ததால் எனக்கு ஞாபகம் இல்லை. எனது அப்பா இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார். பூர்வீக சொத்தை விற்பனை செய்து தாவா சொத்தை கிரையம் வாங்கவில்லை என்றும் எனது அப்பாவின் வருமானத்தை வைத்தும் எனது அம்மாவின் வருமானத்தை வைத்தும் தாவா சொத்து கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் 10ம் வகுப்பு படித்து இடைநிறுத்தம் செய்துள்ளேன். எனக்கு திருமணம் ஆகிவிட்டது. எனது திருமணத்தின் போது எனது அப்பாவும் அம்மாவும் எனக்கு தங்க நகை மற்றும் சீர்சீராட்டுகள் செய்து திருமணம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. நான் எனது அம்மாவை அலைக்கழிவு செய்யவேண்டும் என்பதற்காக நான் இந்த வழக்கை தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது அப்பா உடல்நிலை சரியில்லாமல் இருந்த போது 2ம் பிரதிவாதி திருவேணி தான் எனது அப்பாவை நல்ல முறையில் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. 13.10.2010ல் எனது அப்பா எனது அக்கா திருவேணியின் மகனுக்கு உயில் எழுதி வைத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது அப்பா உயில் எதுவும் எழுதி வைத்துள்ளாரா என்றால் எனது அப்பா உயில் எழுதி வைத்ததாக எனது அம்மா கூறினார் ஆனால் இதுவரை அந்த உயிலை நான் பார்க்கவில்லை. எனது அப்பா 30.12.2010ல் எனது அப்பா இறந்து போனார். எனது அப்பாவிற்கு செய்யவேண்டிய இறுதிச்சடங்கை 2ம் பிரதிவாதியின் மகனான விஷ்ணுதரன் தான் செய்தார் என்றால் சரியல்ல. விஷ்ணுதரன் தான் இறுதிச்சடங்குகளை செய்தார் என்றும் நான் வழக்கிற்காக அவர் செய்யவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது தாவா சொத்திற்கு அருகில் உள்ள தெருவில் வசித்துவருகிறேன். நான் தற்போது கதவு எண் 52, சர்வே சிட்டி, மணலூரில் வசித்து வருகிறேன். நான் எனது அப்பா, அம்மா வீட்டிற்கு கடைசியாக எப்போது சென்றேன் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வரை அங்குதான் இருந்தேன். இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு நான் எனது அப்பா வீட்டிற்கு செல்லவில்லை. தாவா சொத்து நான் கூட்டாக ஒருபோதும் அனுபவம் செய்யவில்லை என்றும் தாவா சொத்து பிரதிவாதிகள் மற்றும் விஷ்ணுதரனின் தனித்த அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும் சொன்னால் சரியல்ல. எனது அப்பா விஷ்ணுதரனுக்கு உயில் எழுதி வைத்த விபரம் எனக்கு நன்கு தெரிந்திருந்தும்

விஷ்ணுதரனை இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு இரண்டு மனைவிகள் எனது அம்மா 2வது மனைவி ஆவார். எனது அப்பாவின் முதல் மனைவி பெயர் முனியம்மாள் அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி முனியம்மாளுக்கும் எனது அப்பாவிற்கும் இரண்டு மகன்கள் அவர்கள் நவநீதகுமார், பாலா ஆவார்கள். அவர்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அவர்கள் வாரிசே கிடையாது. எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்களை எனது அப்பா முதல் மனைவிக்கும் அவரது பிள்ளைகளுக்கும் கொடுத்துவிட்டார் என்றும் தாவா சொத்துக்கள் எனது அப்பா மற்றும் அம்மாவின் சுய சம்பாத்தியத்தில் இருந்து கிரையம் வாங்கப்பட்ட சுய சம்பாத்திய சொத்துக்கள் என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு திருமணம் ஆனது முதல் நான் தாவா சொத்துக்களின் கூட்டு அனுபவத்தில் ஒருபோதும் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளிடம் பணம் பறிப்பதற்காக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது அம்மாவை வயதானகாலத்தில் அலைக்கழிக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு

சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை